**மெதிரிகிரிய பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து மெதிரிகிரிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பலவின வைப்புக் கணக்கின் மீதி ரூபா 240,820 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் மாத்திற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 452,917 தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 670,165 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மிகை ரூபா 217,248 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்கள் மீதி ரூபா 2,972,480 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 2,637,482 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 334,998 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆண்டிற்கான கூட்டுத்தொகை ரூபா 17,160,443 இற்கான வருமானக் கடன்பட்டோர் மீதி, குறிப்பிட்ட வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்படாமல்

திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மிகை அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆண்டின் போது பலவின கடன்கொடுத்தோர் ரூபா 1,060,593 இற்கான மீதி உரிய செலவுத் தலைப்புகளுக்கு வரவு வைக்கப்படாமல் திரண்ட நிதியத்திற்கு வரவு வைத்தமையால் ஆண்டிற்கான மிகை அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதியாகிய ரூபா 243,500 இற்கான தொகை மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத்தொகை கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல், திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் திரண்ட நிதியக் கணக்கின் மீதி அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது ரூபா 57,583 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த 04 வகையான மூலதனச் சொத்துக்கள் வருவாய் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) சபையினால் பயன்படுத்தப்படும் பிலிசரு திண்மக் கழிவுப்பொருள் மத்திய நிலையம் மற்றும் அக்காணி, 03 நூலகங்கள் அமைந்துள்ள காணிகள், 13 பொது விளையாட்டு மைதானங்கள் அமைந்துள்ள காணிகள், 32 மயானங்கள் அமைந்துள்ள காணிகள், ஆயுள்வேத மருத்துவ நிலையம் அது அமைந்துள்ள காணி என்பவற்றை உரித்தாக்கி அவற்றின் பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இரண்டாவது சனசமூக அபிவிருத்தி பிரதேச சபைகள் இடையிலான கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் சபையினால் தீர்க்கப்பட வேண்டியிருந்த ரூபா 2,560,241 இற்கான தொகை, பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு ஒன்றாக கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் இணக்கமின்மைகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) பிரதேச சபையின் நிலையான சொத்துக்களின் பெறுமதி மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கு மீதியுடன் சமமாக இருக்க வேண்டுமெனினும், அம் மீதிகளிடையே ரூபா 243,500 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஐந்தொகையில் காணப்பட்ட தொழில்படு மூலதனத்தின் பெறுமதியை குறை தொழிற்படு மூலதனமாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அங்கு காட்டப்பட்டிருந்த நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்களின் படி தொழிற்படு மூலதனத்தின் பெறுமதி ரூபா 27,051,669 தொகையாகக் காணப்பட்டதுடன் அது ரூபா 26,664,262 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 387,407 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை கூற்றில் காணப்பட்ட பெறுமதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையில் காணப்பட்ட பெறுமதிகளிடையே ரூபா 19,956,573 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்கு மீதிகள் அடங்கியுள்ள 2-20 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளின் பெறுமதி ரூபா 187,846 தொகையாக இருந்ததுடன் அவற்றை மீளாய்வாண்டின் போதும் முன்கொண்டு வந்திருக்கவில்லை.

(ஆ) பல்வேறு செயற்திட்டங்களுக்காக தடுத்து வைத்துள்ள நிர்மாணவேலை வைப்புக்கள் ரூபா 3,709,928 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுப் பெறுமதி ரூபா 218,690,007 தொகைக்கான 07 சொத்துக்கள் விடயங்கள் மற்றும் ரூபா 1,066,891 தொகைக்கான பொறுப்பு விடயம் ஒன்று உரிமையை உறுதிப்படுத்தல் ஆவணங்கள், மெய்மையாய்தல் சபை அறிக்கை மற்றும் விரிவான அட்டவணை என்பன சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி இலக்கம் 19 | 2016 ஆண்டின் போது வழங்கியிருந்த 05 பற்றுச்சீட்டு புத்தகங்களுக்குரிய அடியிதழ் புத்தகங்களை 2017 மே மாதம் இறுதி வரை திருப்பி பெற்றிருக்கவில்லை. |
| (ii) விதி இலக்கம் 59 முதல் 63 வரை | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பாக அட்டவணை ஒன்று ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 திகதி அளவில் தயாரித்து அதன்படி பதிவேட்டினைத் திருத்தி கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி இலக்கங்கள் 203,204 மற்றும் 218 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நி.பி. 104 | கிராமங்களுக்கு இடையிலான செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,939,000 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பாலம் ஒன்று உடைந்து விழுந்தது தொடர்பாக நட்டங்கள் சேதங்கள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ii) நி.பி. 156(1)

பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக உரிய தினத்தில் மின்சார பில்பத்திரங்கள் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் செலுத்தாமையின் காரணமாக ரூபா 18,575 தொகை வட்டி மற்றும் மிகை விதிப்பு ஒன்றினை சபை செலுத்த நேரிட்டிருந்த போதிலும் அவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) நி.பி. 571,572

ஒவ்வொரு அரை ஆண்டு இறுதியிலும் காலங்கடந்த அனைத்து வைப்புக்கள் தொடர்பாக பட்டியல் ஒன்று தயாரித்து விசாரணை மேற்கொண்டு சபையின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும், வைப்புச்செய்து 2 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையான காலம் கடந்துள்ள ரூபா 3,377,566 தொகை பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(iv) நி.பி. 1646

வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த பின்னர் தொடர்ந்து வரும் மாதத்தில் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) நி.பி. 1647

ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் வாகனங்கள் மீதான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(இ) சுற்றறிக்கைகள் மற்றும் சுற்று நிருபங்கள்

---

| | |
|---|---|
| 1995 ஜனவரி 29 ஆம் திகதிய NCP/PL/4/2/10/1/92 உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பயன்படுத்தும் மற்றும் பொறுப்பில் இருக்கும் சொத்துக்களின் தன்மைகளின் பிரகாரம் ஊழியர் பிணைப் பணம் பெறப்பட வேண்டிய போதிலும், 2014 ஆண்டின் பின்னர் சபையினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, 2016 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 10,152,038 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 7,942,753 தொகையாகும்.

## 2.2 வருமானம் நிருவாகம்

### 2.2.1 வீதவரி மற்றும் வரி

2016 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,594,969 தொகை மற்றும் ஆண்டிற்கான சிட்டையிடப்பட்ட தொகையாகிய ரூபா 1,371,598 தொகையுடன் ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வீதவரி வருமானம் ரூபா 3,966,567 தொகை எனினும் அவற்றில் சேகரிக்கப்பட்டுள்ள வருமானம் ரூபா 1,186,894 ஆகக் காணப்பட்டமையால் அவை சேகரிக்கப்பட வேண்டிய வருமானத்தில் 30 சதவீதமாகும். எனினும் நிலுவை வீதவரி தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 ஏனைய வருமானங்கள்

2016 ஜனவரி 01 திகதியிலுள்ளவாறு மீதி ரூபா 665,544 இற்கான விற்பனவுகள் (நீர்,மின்சாரம்) வருமானத்தில் இருந்து மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 10,950 தொகை எனப்படும் 02 சதவீதமாகும்.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பண வருமானம்**

2016 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 10,253,033 மற்றும் மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு தொகையாகிய ரூபா 6,000,000 தொகையுடன் மொத்த மதிப்பிடப்பட்ட நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 16,253,033 தொகையாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது உண்மையாகச் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 500,000 தொகையாக காணப்பட்டமையால் அவை சேகரிக்கப்பட வேண்டிய வருமானத்தில் 3 சதவீதமாகும்.

**2.2.4 முத்திரைக் கட்டணம்**

ஆரம்ப மீதி ரூபா 5,705,050 தொகையும் ஆண்டிற்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 1,000,000 உட்பட மொத்த மதிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 6,705,050 தொகையெனினும் ஆண்டின் போது ஒரு தொகையேனும் சேகரித்திருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

(அ) 2016 மாகாண சபைகள் அபிவிருத்தி மானியத்தின் கீழ் 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,235,572 தொகையொன்று வாய்கால்கள் புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் அணைக்கட்டு ஒன்று நிர்மாணித்தல் போன்ற பிரதேச சபையின் கருமங்களில் அடங்காத விடயங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 19 செயற்திட்டங்களுக்காக கிடைத்திருந்த நிதியேற்பாடுகள் ரூபா 4,475,000 இல் இருந்து ரூபா 800,000 பெறுமதியான 04 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) சபையின் விடயங்களுக்காக பயன்படுத்தப்படும் 04 வாகனங்களின் பதிவு சான்றிதழ்கள் சபையினை பேரில் மாற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஓட்ட நிலையில் காணப்படாத 03 மோட்டார் வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக மாதாந்த ஓட்ட அட்டவணைகள் பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை

எடுத்திருக்கவில்லை. ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது 1045 மீற்றர் மணித்தியாலங்கள் மற்றும் 80,240 கிலோமீற்றர்களும் ஓட்டப்பட்டிருந்தது.

(ஈ) வாகனங்கள் வாடகைக்குக் கொடுக்கும் போது நிலுவை வருமானத்தினை இனங்காணக் கூடிய விதமான பதிவேடுகள் பேணப்படாமையால் 2014 ஆண்டு தொடர்பாக ரூபா 342,180 இற்கான நிலுவை வருமானம் அறவிடப்பட்டனவா எனவும் மற்றும் ஆண்டிற்காக நிலுவை வருமானம் எவ்வளவு என இனங்காணப்பதற்கு முடியாதிருந்தது.

(உ) பிரதேச சபையின் விடயங்கள் நடாத்துவதற்கான முக்கியமான பதவி ஒன்றாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி 2007 ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

(அ) சபைக்குச் சொந்தமான நிர்மாண வேலைகள் மற்றும் பாதை அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தக் கூடிய 03 டிப்பர் வண்டிகள் மோடர் கிரேடர் ஒன்று, டபள் டிரம் பாதை தகர்க்கும் இயந்திரம், 08 டிரக்டர்கள், கொங்கிரீட் அச்சுக்கள் இயந்திரமொன்று கொங்கிரீட் கலவை இயந்திரமொன்று, JCB இயந்திரமொன்று என்பன காணப்பட்ட போதிலும் இந்த இயந்திரங்களை செயல் நடவடிக்கைத் திட்டமொன்றின் மூலம் ஆக்கபூர்வமாக செயற்பட்டு விடயங்களை ஈடுபடுத்தி அவை தொடர்பான தெளிவான விபரம் அடங்கிய அறிக்கைகள் பேணப்பட்டு இருக்காமையினால் மீளாய்வாண்டில் வாகனங்கள் இயந்திரங்கள் ஈடுபடுத்தியதன் மூலம் சாரதி சம்பளங்களுக்கு மேலதிகமாக ஏற்பட்டிருந்த ரூபா 224,885 இற்கான செயற்பாட்டு நட்டம் பொது மக்கள் சேவைக்கு ஈடுபடுத்தியமையால் ஏற்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) வடமத்திய மாகாண முதலமைச்சினால் 2015 பின்தங்கிய மற்றும் தனிமைக் கிராமங்களை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யுதகனாவ துலான பை வகைகள் உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்றிற்காக ரூபா 300,000 பெறுமதியான உபகரணங்கள் 2016 ஆண்டின் போது பிரதேச சபையுடன் வழங்கியிருந்த போதிலும் அதற்காக சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளல் மற்றும் நலன்பெறுவோருடன் உடன்படிக்கை மேற்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் எதிர்ப்பார்த்த செயற்திட்டம் இது வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 2,765,362 தொகை பெறுமதியான 07 வாகனங்கள் மற்றும் இயந்திர அலகும் 3 வருடம் முதல் 9 வருட காலப்பகுதியில் செயற்படுத்தப்படாமல் மற்றும் இயற்கை அழிவுகளுக்கு ஆளாகி காணப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஊ) வாகன நிருவாகம்